IN THE COURT OF DISTRICT MUNSIF, T. VADIPATTI, MADURAI DISTRICT

| | | | | |
|---|---|---|---|---|
| | | O.S. No. | : | 63/2019 |
| | | P/W's | : | 2 |
| DEPOSITION OF WITNESS | | | : | |
| NAME | P.Senthilkumar | CASTE | : | |
| S/O. / W/O. | | RELIGION | : | |
| VILLAGE | | CALLING | : | |
| TALUK | | AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of **14-10-2022**

## CHIEF EXAMINATION :

நான் இவ்வழக்கில் வாதி தரப்பு சாட்சி ஆவேன். மேலும், இவ்வழக்கில் வாதி தரப்பில் 2வது சாட்சி ஆவேன். மேற்படி வழக்கில் எனது தரப்பில் பிரமான வாக்கு மூலம் தாக்கல் செய்கிறேன். என்னால் தாக்கல் செய்யப்பட்டுள்ள பிரமான வாக்கு மூலத்தில் கண்டுள்ள சங்கதிகள் யாவும் உண்மை என்றும், அதில் உள்ள கையொப்பம் என்னுடையது என்றும் உளமாற உறுதி அளிக்கிறேன். என்னால் அளிக்ககக்கூடிய சாட்சியம் மற்றும் ஆவணங்கள் உண்மையானவை என உறுதியளிக்கிறேன்.

முதல் விசாரணை (வா.சா.2 ஆஜர்.) சத்தியப்பிரமானம் செய்யப்பட்டு சாட்சி விசாரணை பதிவு செய்யப்பட்டது.

(ஆவணங்கள் ஏதும் குறியீடு செய்யப்படவில்லை)

## குறுக்கு விசாரணை (வாதி தரப்பில்) : **14-10-2022**

தாவா சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியும் சர்வே எண்.80/6 ஆகும். சர்வே எண்.80/6 என்பது வழக்கு சொத்திற்கு சம்பந்தப்பட்டது என்று உங்களது பிரமான வாக்குமூலத்தில் சொல்லியுள்ளீர்களா என்றால் சொல்லியுள்ளேன். அவ்வாறு உங்களால் தாக்கல் செய்யப்பட்ட பிரமான வாக்குமூலத்தில் சர்வே எண்.80/6 குறித்து எதுவும் சொல்லவில்லை, வழக்கிற்காக சர்வே எண் சொல்லியுள்ளதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் அது சரியல்ல. சொல்லியுள்ளேன். வாதி குப்பையாண்டி என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் வாதிக்கு பாத்தியப்பட்ட இடத்தில் வீடு கட்டிவிட்டதாக பிரதிவாதிக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்துள்ளார். நீங்கள் எங்கு

வசித்து வருகிறீர்கள் என்றால் சின்னஇலந்தைகுளம் ஆகும். நீங்கள் சின்ன இலந்தைகுளம் கிராமத்தில் வசித்து வருவதற்கு ஆதரவாக ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால் தாக்கல் செய்துள்ளேன். நீங்கள் சின்னஇலந்தைகுளம் கிராமத்தில் வசத்து வருவதற்கான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை, வழக்கிற்காக மேற்படி கிராமத்தில் வசித்து வருவதாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்று சொன்னால் அது சரியல்ல. நான் அங்கு தான் வசித்து வருகிறேன். தாவா சொத்து எத்தனை அயிட்ட சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் தெரியாது.

தாவா சொத்து குறித்து வாதியால் என்னென்ன ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தில் பிரதிவாதி கருப்புசாமி வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 9 செண்ட் இருக்கும். தாவா சொத்து மொத்த விஸ்தீரணம் சரியாக எவ்வளவு இருக்கும் என்று உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான். 9 செண்ட் இருக்கும். தாவா சொத்து மொத்தம் எத்தனை நபர்களுக்கு பாத்தியப்பட்டது என்றால் பங்காளிகளுக்கு பாத்தியப்பட்டதாக சொல்கிறார்கள். ஆனால், எவ்வளவு பேருக்கு பாத்தியம் என்று எனக்கு தெரியாது. மேற்படி பங்காளிகள் யார் யார் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. பங்காளிகளுக்குள் பாக பிரிவினை செய்து கொண்டார்களா என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. தாவா சொத்தின் நான்குமால் தெரியுமா என்றால் தாவா சொத்தின் வடக்கே ரோடு உள்ளது. தாவா சொத்தின் கிழக்கே கருப்பசாமி வீடும், தாவா சொத்திற்கு மேற்கே மலைச்சாமி மகன் கண்ணன் என்பவரின் இடம் உள்ளது. தாவா சொத்திற்கு தெற்கே கேசவன் மகன் பெரியகருப்பன் உள்ளார்கள்.

தாவா சொத்தில் இருந்து அமரடாக்கி கிராமம் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சரியாக எனக்கு தெரியாது. அமரடாக்கி கிராமம் எல்லைக்கு அருகில் தாவா சொத்து உள்ளதா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்தின் நான்கெல்லை என்பது மேலே கண்டவாறு உங்களால் சொல்லப்பட்ட நான்கெல்லைகள் தான் உண்மையான நான்கெல்லைகள் என்று சொன்னால் ஆம் சரிதான். தாவா சொத்து வாதி யாரிடம் இருந்து கிரையம் வாங்கியுள்ளார் என்ற விபரம் எதுவும் உங்களுக்கு தெரியாது என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்து வாதி குப்பையாண்டிக்கு எவ்வாறு கிடைத்தது என்று உங்களுக்கு தெரியுமா என்றால் எனக்கு தெரியாது. அவர் தகப்பனாரிடம் இருந்து வந்தது. வாதி குப்பையாண்டிக்கு பாத்தியப்பட்ட இடத்தில் பிரதிவாதி கருப்புசாமி அவர்கள் எவ்வளவு விஸ்தீரணம்

ஆக்கிரமிப்பு செய்துள்ளதாக உங்களது முதல் விசாரணை பிரமான வாக்குமூலத்தில் சொல்லியுள்ளீர்கள் என்றால் எனக்கு தெரியாது. தாவா சொத்து தொடர்பாக பிரச்சனை ஏற்பட்டு காவல்நிலையத்தில் புகார் கொடுக்கப்பட்டு விசாரணை செய்தார்களா என்றால் விசாரணை செய்தார்கள். போலீஸ் விசாரணையில் நீங்கள் கலந்து கொண்டீர்களா என்றால் இல்லை.

தாவா சொத்து விபரங்கள் எதுவும் உங்களுக்கு தெரியாமலும், வழக்கு விபரங்கள் எதுவும் தெரியாமலும், வாதி கேட்டுக்கொண்டதற்கிணங்க பொய்யாக சாட்சியம் அளிக்கிறீர்கள் என்பதினாலும், வாதியின் தாவா தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்று சொன்னால் அவ்வாறு சொல்வது சரியல்ல.

(ஒம்.) திரு. T. கோகுலகிருஷ்ணன், பி.ஏ.,பி.எல்.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
வாடிப்பட்டி